# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# M.C.O.P. No.247/2023

PW1– பொன்னம்பலம் நாள். 12.12.2024

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் தான் போலீசில் புகார் கொடுத்தேன். போலீசார் முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள விவரங்கள் சரிதான். முதல் தகவல் அறிக்கைப்படி என் மகன் மீது தான் தவறு இருப்பதாக முதல் தகவல்அறிக்கையில் போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எதிர்மனுதாரர் என் மகனையோ அவரது வாகனத்தையோ மோதவில்லை என்றால் சரியல்ல. என் மகன் பேருந்தை முந்தி சென்று பாலக்கட்டையில் மோதி தூக்கி எறியப்பட்டு பேருந்தின் வலதுபின்புறத்தில் மோதி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. என் மகன் பாலத்தை தாண்டி சென்று முந்தி சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. என் மகன் சென்ற வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்டாளரையும் வழக்கில் சேர்க்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் இழப்பீடு கேட்பதாக இருந்தால் என் மகன் ஓட்டி சென்ற வாகனத்தின் காப்பீட்டாளரை கேட்க வேண்டும் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஓட்டுநர் விபத்திற்கு காரணம் இல்லை என்பதால் எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கேட்க கூடாது என்றால் சரியல்ல. என் மூத்த மகன் மருத்துவம் படிக்கிறார். என் மனைவி சத்துணவு உதவியாளராக வேலை பார்த்து வருகிறார். நானும், என் மனைவியும் இறந்த என் மகனின் வருமானத்தை நம்பி உள்ளோம் என்றால் சரியல்ல. என் மகன் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியாமல் சென்றார் என்றால் சரியல்ல. என் மகன் தான் விபத்திற்கு காரணம் என்பதால் அவருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.